ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 446)		Jul (1) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..4

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog:namperumal.wordpress.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 266)

மூன்றுவிதமான ஸ்நாநவிதி நிரூபணம்

94. தத் புநஸ்த்ரிவிதம் ஸ்நாநம் ஜல மந்த்ர ஸ்ம்ருதி க்ரமாத்
த்ரிவிதம் புருஹூதைதத் ஸ்ம்ருதம் சதகுணோத்தரம் ॥ ௯௪ ॥

பொருள் – இந்த்ரனே! மூன்றுவிதமான நீராடுதல்கள் உள்ளன. அவையாவன: நீரில் நீராடுதல், மந்த்ரங்களால் நீராடுதல் மற்றும் த்யானம் கொண்டு மனதால் நீராடுதல் ஆகும். இவை ஒவ்வொன்றும் தங்களுக்கு முன்பாக உள்ளவற்றைக் காட்டிலும் நூறு மடங்கு சிறந்ததாக உள்ளன.

95. புஷ்கராதிஷு தீர்தேஷு யத் ஸ்நாநம் ஜலஜம் ஸ்ம்ருதம்
தத: சதகுணம் ஸ்நாநம் பகவச்சாஸ்த்ரசோதிதம்

பொருள் – புஷ்கரம் முதலான இடங்களில் நீராடுதல் என்பது "ஜல ஸ்நாநம்" ஆகும். பகவத் சாஸ்த்ரத்தால் நீராடுதல் என்பது, அதனைக் காட்டிலும் நூறு மடங்கு சிறந்ததாகும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 411)

6-5-2. குமுறும் ஓசை விழவு ஒலித் தொலைவில்லி மங்கலம் கொண்டு புக்கு
அமுத மென் மொழியாளை நீர் உமக்கு ஆசை இன்றி அகற்றினீர்
திமிர் கொண்டால் ஒத்து நிற்கும் மற்று இவள் தேவ தேவபிரான் என்றே
நிமியும் வாயொடு கண்கள் நீர் மல்க நெக்கு ஒசிந்து கரையுமே

பொருள் – கம்பீரமான பலவிதமான கோஷங்களையும், உத்ஸவக் கொண்டாட்டங்களையும் கொண்டதான திருத்தொலைவில்லிமங்கலத்தில் இவளை அழைத்துச் சென்று, அமிர்தம் போன்று இனிமையாக மென்மையான சொற்கள் கொண்ட இவளை, இவளுடைய இந்தச் சொற்களுடைய இனிமையை அறிந்த நீங்கள், உங்களுக்கு அந்தச் சொற்களில் ஆசை இல்லை என்பதால், உங்களுடன் உறவு வேண்டாம் என்று அகலும்படிச் செய்தீர்கள். இவளுடைய உறவின் உறுதியை எப்படி அறியலாம்? இவள் திமிர் கொண்டது போன்று ஏதும் பேசாமல் நின்றாள். அதனையும் மீறி இவள் ஏதேனும் உரைத்தால், “நித்யஸூரிகளான விஷ்வக்ஸேநர் போன்றவர்களுக்கும், தேவர்களுக்கும் தன்னை அனுபவிப்பதற்கு ஏற்றபடி தன்னை அளிக்கின்ற மஹா உபகாரகன்” என்று மட்டுமே கூறுகிறாள். தனது கண்களில் கண்ணீர் பெருகும்படியாக, கட்டுக் குலைந்து, தளர்ந்து, நீர்ப்பண்டமாக நிற்கிறாள்.

அவதாரிகை – “அவ்வூரில் கொடுபுகவேண்டினால், திருநாளிலே கொடுபுகுவாருண்டோ?”, என்கிறாள்.

விளக்கம் – “அந்த ஊருக்கு அழைத்துச் செல்வது என்ற நிலை ஏற்பட்டாலும், அங்கு திருநாள் நடக்கும் நேரத்தில் செல்வார்களோ?”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (குமிறுமோசைவிழவொலி) “தேஷாம் புண்யாஹ கோஷோத கம்பீர மதுரஸ்வந: அயோத்யாம் பூரயாமாஸ தூர்யநாதாநுநாதித:” என்று, ஒத்துச் சொல்லுவார், ஸங்கீர்த்தநம் பண்ணுவார், பாடுவார், இயல்விண்ணப்பஞ் செய்வாராய், எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி விரவிக் கொண்டெழுகிற த்வநியையுடைய திருநாளில் ஆரவாரம். பாவியேன்! இத்த்வநி செவிப்பட்டால் கொண்டு மீளவன்றோ அடுப்பது. “இவ்விடம் பிள்ளைகொல்லி” என்று கூப்பிடுமா போலே காணும் த்வநியிருக்கிறது. அவ்வூரும் திருநாளும் அங்குள்ளார் படுகிறதுங் கண்டு வைத்து இவளைக் கொண்டு புகுவாருண்டோ? (கொண்டு புக்கு) இவளறியாதிருக்க நீங்களே கொண்டு புக்கு.

விளக்கம் – (குமிறும் ஓசை விழவொலி) - அயோத்யாகாண்டம் (6-8) - தேஷாம் புண்யாஹ கோஷோத கம்பீர மதுரஸ்வந: அயோத்யாம் பூரயாமாஸ தூர்யநாதாநுநாதித: – அதன் பின்னர், அந்தணர்களுடைய கம்பீரமும் மதுரமும் கலந்த ஓசைகளைக் கொண்டதும், தூரியம் என்ற வாத்தியத்தின் ஒலி கொண்டதும் ஆகிய புண்ணியாஹவாசன ஓசையானது அயோத்தி முழுவதும் பரவியது - என்பது போன்று வேதம் ஓதுபவர்கள், ஸங்கீர்த்தனம் செய்பவர்கள், பாடுபவர்கள், இயல் விண்ணப்பம் செய்பவர்கள் என்பதாக எழும் த்வனி கொண்ட திருநாளின் ஆரவாரம். இத்தகைய ஆரவாரம் கேட்டால், அங்கு கொண்டு சென்று, மீண்டும் அழைத்து வருவது இயலுமா? “இங்கு பிள்ளைகொல்லி” என்று அழைப்பது போன்று அல்லவோ அந்த த்வனி உள்ளது? அந்த ஊர் மற்றும் திருநாள் ஆகிய நேரங்களில், அந்த இடத்தில் உள்ளவர்கள் படும்பாட்டைக் கண்ட பின்னரும் இவளை அங்கு அழைத்துச் செல்பவர்கள் உள்ளனரா? (கொண்டு புக்கு) - இவள் அந்த இடம் மற்றும் திருநாள் குறித்து ஏதும் அறியாதபடி உள்ளபோதிலும் நீங்கள் அழைத்துச் சென்றீர்கள்.

வ்யாக்யானம் – (அமுத மென்மொழியாளை) இவள் மொழி, கேட்டார்க்கு நித்யத்வத்தைக் கொடுக்குமே. இவ்வினிய பேச்சைக் கேளாதபடி பாக்யஹீநைகளாவதே நீங்கள். அதாவது, அவ்வூரிலே புக்க பின்பு இவர்களுடன் வார்த்தை சொல்லத் தவிர்ந்தாளாயிற்று. “மதுரா மதுரா லாபா” என்னும்படி

காணுமிருப்பது. இது கேட்க ஆசைப்பட்டிருக்குமவன் பெற்றுப் போனான். (மென்மொழி) அம்ருதத்தில் வ்யாவ்ருத்தி, ச்ரவண யோக்யமாயிராதே அம்ருதம்; வேணுமாகில் ரஸ்யதைக்கு ஒரு சொல்லுக்கு நிற்கிறது, மார்தவம் இதுக்கேயுண்டு இத்தனை.

விளக்கம் – (அமுத மென்மொழியாளை) - இவளுடைய பேச்சானது, கேட்பவர்களுக்கு அழியாத தன்மையை அளிக்கவல்ல அமிர்தம் போன்று உள்ளது. இத்தகைய இனிமையான பேச்சைக் கேட்க இயலாதபடி, புண்ணியம் அற்றவர்களாக நீங்கள் ஆகிறீர்களே! அதாவது திருத்தொலைவில்லிமங்கலத்திற்கு இவளை அழைத்துச் சென்றதால், அங்கு ஈடுபட்ட இவள், இவர்களுடன் எந்த ஒரு சொல்லையும் உரைப்பதற்குத் தவிர்த்தாள்; ஆகவே அமிர்தம் போன்ற இவளுடைய பேச்சைக் கேட்டபடி இராமல், அங்கு அழைத்துச் சென்றதன் மூலம் இவளுடைய பேச்சை நீங்கள் இழந்தீர்கள் என்று கருத்து. ஆனால் பேச்சானது இனிமையானதாக இருக்குமோ என்பதற்கு ப்ரமாணம் ஸுந்தரகாண்டம் (66-15) – மதுரா மதுரா லாபா – அழகானவளும், இனிமையான பேச்சு கொண்டவளும் – என்பதாக இருக்கிறாள். இதனைக் கேட்க விரும்பியவன் அதனைப் பெற்றுப் போனான். (மென்மொழி) – அமிர்தத்திற்கும் இதற்கும் வேறுபாடு கூறுகிறார். கேட்பதற்கு இனிமையாக அமிர்தம் இருப்பதில்லை; அமிர்தம் என்பது சுவைக்கு வேண்டுமானால் ஒரு சொல்லில் அடங்குவதாக உள்ளது; ஆனால் மென்மை இங்கு மட்டுமே உள்ளது.

வ்யாக்யானம் - (நீருமக்காசையின்றி யகற்றினீர்) இவள் பேச்சுக் கேட்டுப் போருகிற நீங்களே உங்களுக்கு இவள் வழிப்படாதபடி பண்ணினிகோள். (திமிர் கொண்டாலொத்து நிற்கும்) "ஸ்தப்தோஸி" என்னுமாபோலே, அநுபாவ்ய விஷயத்தை யநுபவிக்கவும் மாட்டாதே ஸ்திமிதையாய் நில்லாநின்றாள். "ஸ்தப்தோஸ்யுத" என்கிறபடியே, பரிபூர்ண ஜ்ஞாநரைப்போலே யிராநின்றா ளென்றுமாம். (மற்றிவள்) இவள் இதுக்கு மேலே வார்த்தை சொல்லில். (தேவதேவபிரானென்றே) இங்கே கண்டாலும் "அயர்வறுமமரர்களதிபதி" யிங்கே வந்து ஸுலபனானான் என்றாயிற்று இவள் புத்தி பண்ணுவது. நாயகனுடைய மேன்மைக்குத் தோற்று வார்த்தை சொல்லுகிற இவளை மீட்கப்போமோ? (என்றேநிமியும்) "அப்பெரியவன் இப்படி ஸுலபனாய் சீலவானாவதே!" என்று, அந்த சீலவத்தையைச் சொல்லப் புக்குத் தலைக்கட்டமாட்டாதே உதடு நெளிக்கும், உதடு நெளிக்கிற வாயோடே கண்கள் நீர் மல்க. (நெக்கு) சிதிலையுமாய். (ஒசிந்து)

பரவசையாய். (கரையும்) நீராகாநின்றாள். (நெக்கொசிந்து கரையுமே) பெருவெள்ளத்தில் கரையானது நெகிழ்ந்து ஒட்டுவிட்டொசிந்து பொசிந்து அவயவியாகாதபடி கரைந்து போமாபோலே, ஓரவயவியாக்கிக் காணவொண்ணாதபடி கரைந்து போகாநின்றாள்.

விளக்கம் – (நீர் உமக்கு ஆசையின்றி அகற்றினீர்) இவளுடைய பேச்சைக் கேட்டுப் போகும் நீங்களே, இப்போது இவள் உங்களுக்கு அடங்காதபடி செய்தீர்கள். (திமிர் கொண்டாலொத்து நிற்கும்) - இங்கு இரண்டுவிதமாகப் பொருள் கூறுவர். "ஸ்தப்தோஸி - செயல் அற்று நிற்கிறோம்" என்பது போன்று, அனுபவிக்கவேண்டிய விஷயத்தை அனுபவிக்க இயலாமல், செயல் அற்றவளாக நின்றாள் என்பது முதல் கருத்து. அடுத்து "ஸ்தப்தோஸ்யுத - செயல் அற்றவன் ஆகிறாய்" என்பதற்கு ஏற்ப, பரிபூர்ணமான ஞானம் கொண்டவர்கள் போன்று ஏதும் செய்யாமல் நின்றாள் என்பது இரண்டாவது கருத்து. (மற்று இவள்) – இவள் இந்த நிலையையும் மீறி ஏதேனும் சொற்களைக் கூறினால் அந்தச் சொற்களானவை, (தேவதேவபிரானென்றே) - என்பதாகவே கூறுகிறாள். ஆனால் நம்முடைய புத்திக்கு எட்டாதபடி உள்ளவனை இவள் "தேவதேவபிரான்" என்று கூறுவது எப்படி என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; இங்கு கண்டாலும், "அயர்வறும் அமரர்கள் அதிபதி" இங்கு வந்து சுலபமாக அடையும்படி நிற்கிறான் என்றே இவள் அறிகிறாள். நாயகனுடைய மேன்மைக்குத் தோற்றுப்போய், இவ்விதமாகச் சொற்கள் கூறும் இவளை, உங்களால் மீட்க இயலுமா? (என்றே நிமியும்) - "அப்படிப்பட்ட மேன்மை கொண்டவன் இவ்விதம் சுலபனாக வந்து எளிமையாக உள்ளானே" என்று அத்தகைய எளிமைத் தன்மையைக் கூற முயன்றவளாக, கூற இயலாமல், உதடுகளை நெளித்தபடி உள்ளாள். உதடுகளை நெளிக்கும் வாயுடன் சேர்ந்து கண்ணீர் பெருகி நிற்க. (நெக்கு) - கட்டுக்குலைந்து. (ஒசிந்து) - பரவசம் அடைந்து. (கரையும்) - நீராக நின்றாள். (நெக்கொசிந்து கரையுமே) - "நெக்கு, ஒசிந்து, கரைந்து" ஆகிய மூன்றையும் உதாரணம் மூலம் கூறுகிறார்; பெரிய வெள்ளத்தில் கரையானது நெகிழ்ந்து, உடைந்து, உருகி, ஒரு பொருள் என்று அறிய இயலாதபடி கரைந்து விடுவது போன்று, இவளை ஓர் உருவம் என்று காண இயலாதபடி கரைந்து நின்றாள்.

6-5-3. கரை கொள் பைம் பொழில் தண்பணைத்
தொலைவில்லி மங்கலம் கொண்டு புக்கு
உரை கொள் இன் மொழியாளை நீர் உமக்கு ஆசை இன்றி அகற்றினீர்
திரை கொள் பௌவத்துச் சேர்ந்ததும் திசை ஞாலம் தாவி அளந்ததும்
நிரைகள் மேய்த்ததுமே பிதற்றி நெடும் கண் நீர் மல்க நிற்குமே

பொருள் - தாமிரபரணியின் கரையை விழுங்கும்படியான பரந்த பொழிலையும், குளிர்ந்த நிலத்தையும் கொண்டதான திருத்தொலைவில்லிமங்கலத்திற்கு இவளை அழைத்துச் சென்று, அதன் விளைவாக, இந்த லோகம் முழுவதும் கொண்டாடும்படியான இனிமையான சொற்கள் கொண்ட இவளை, இவளுடைய இந்தச் சொற்களுடைய வேறுபாட்டை நன்கு அறிந்த நீங்கள், உங்களுக்கு அதில் ஆசை இல்லாதவர்களாக, இவளை அகற்றினீர்கள். இதன் பொருள் என்ன? தன்னை வேண்டி நிற்பவர்கள் கூக்குரல் கேட்கும்படியாக, தனது ஸ்பர்சம் காரணமாக எழுந்த அலைகள் கொண்ட திருப்பாற்கடலில், அவன் தனது அடியார்களைக் காப்பாற்றும் நோக்குடன் திருக்கண்கள் வளர்ந்த விதத்தையும்; திசைகளுடன் கூடிய இந்தப் பூமியை மிகவும் எளிதாகத் தாவி அளந்து, தனக்கு மட்டுமே சொந்தம் என்று செய்த விதத்தையும்; பசுக் கூட்டத்தை மேய்த்த விதத்தையும் மட்டுமே பிதற்றியபடி, தனது நீண்ட கண்கள் நீர் மல்கும்படியாக இவள் உள்ளாள்.

அவதாரிகை – “திருநாளிலே தான் கொண்டு போகவேண்டினால், திருச்சோலை யுள்ளிட்டுக் கொடுபுகுவாருண்டோ?”, என்கிறாள்.

விளக்கம் – தோழி தாய்மார்களிடம், “திருநாளில்தான் அங்கு அழைத்துச் சென்று விட்டீர்கள். அது போகட்டும். அவ்விதம் சென்றாலும், அங்குள்ள திருச்சோலைகளுக்கு யாரேனும் அழைத்துச் செல்வார்களா?”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (கரைகொள் பைம்பொழில்) திருப்பொருநற்கரையைப் பொழில் விழுங்கியிருக்கை. கரையைப் பொழில் கொண்டாற்போலே, இவளைக் குணங் கொண்டபடி. அத்திருச்சோலையை யுங்களுடைய ஹித வசநத்தாலே பேர்த்துக் கொடுபோமன்றன்றோ இவள் நிலையை யுங்களால் பேர்க்கலாவது! பரந்த பொழிலையும் குளிர்ந்த நீர்நிலங்களையுமுடைய திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக்கு. (உரைகொள் இன்மொழியாளை)

"பாட்யேகேயே ச மதுரம்" என்னும் ஶ்ரீராமாயணம் குத்துண்ணும்படியான பேச்சென்னுதல்; அர்த்தத்திலிழிய வேண்டாதே, "உரையே யமையும்" என்னும்படியான பேச்சென்னுதல். "இதோருரையே! பேச்சே!" என்று நாட்டார் கொண்டாடும்படியான பேச்சென்னுதல். அப்பேச்சில் வாசியறிந்து அனுபவிக்க மாட்டாதே, நீங்களே யாசையின்றி அகற்றினிகோள். (உரைகொள் இன்மொழி) மாற்றும் உரையும் அற்ற பேச்சென்னுதல்; உரை - அடைவுசொல்.

விளக்கம் – (கரைகொள் பைம்பொழில்) - கொள்கை என்றால் அபகரித்தல், தாமிரபரணியின் கரைகளைப் பொழில்கள் அபகரித்து நிற்கின்றன. அந்தக் கரையை பொழில்கள் அபகரித்தது போன்று, இவளை அவனுடைய குணங்கள் அபகரித்தன. அந்தத் திருச்சோலையானது, உங்களுடைய நன்மை அளிக்கவல்ல பேச்சு மூலம் அங்கிருந்து அகன்றால் அல்லவோ, இவளுடைய நிலையை உங்களால் அகற்ற இயலும்? பரந்த பொழில்கலையும், குளிர்ந்த நீர் நிலங்களையும் கொண்ட திருத்தொலைவில்லி மங்கலத்திற்கு அழைத்துச் சென்று, (உரைகொள் இன்மொழியாளை) - இதற்கு ஐந்து பொருள்கள் கூறுகிறார். முதல் பொருளில், "உரை" என்பது இராமாயணத்தைக் குறிக்கும். பாலகாண்டம் (4-8) – பாட்யேகேயே ச மதுரம் - படிப்பதிலும் பாடுவதிலும் இனிமையாக உள்ளது - என்பதான இராமாயணமும் கூடப் பின்தங்குவது போன்றுள்ள இவளுடைய பேச்சு. அடுத்து, அந்தப் பேச்சின் ஆழ்பொருளில் கூட இறங்கவேண்டாம், அதன் உரைத்தலே போதுமானது என்பதற்கு ஏற்ப உள்ள பேச்சு என்பது இரண்டாவது பொருள் ஆகும்; இங்கு "உரை" என்பது "சொல்" என்ற பொருள் கொண்டதாக உள்ளது. "இந்தப் பேச்சுதான் எத்தகையது" என்று ஊரில் உள்ளவர்கள் கொண்டாடும்படியாக உள்ள பேச்சு என்பது மூன்றானது பொருள் ஆகும்; இங்கு "உரை" என்பது நாட்டில் உள்ளவர்கள் கொண்டாடும்படியாக உள்ள பேச்சு என்ற பொருளில் உள்ளது. அந்தப் பேச்சின் வேறுபாட்டை அறிந்து, அனுபவித்து நிற்காமல், நீங்களே அதில் ஆசை இல்லாதவர்களாக இவளை அகற்றினீர்கள். (உரைகொள் இன்மொழி) - இங்கு நான்காவது பொருள் கூறப்பட்டது; மாற்றும் உரையும் அற்ற பேச்சாக உள்ளது; அதாவது வெல்லுதல் என்பதாக உள்ள பேச்சு. ஐந்தாவதாக, "உரை" என்பது "அடைவு சொல்" என்றாகிறது; அதாவது இந்தப் பாசுரத்தில் "கரை, உரை, திரை, நிரை" என்பது போன்றுள்ள அமைப்பு. இங்கு கொள்ளுகை என்றால், இவற்றைக் கொண்டிருத்தல் என்று கருத்து.

வ்யாக்யானம் - (உமக்காசையின்றி யகற்றினீர்) அவ்வூரிலே கொடுபுகுகையும், இவள் பக்கல் நசையறுகையென்றும் பர்யாயம். ஆயிட்டு “இவளை வேண்டா” என்றன்றோ கொடுபுக்கதென்கிறாள். (திரைகொளித்யாதி) ஸ்வஸந்நிதாநத்தாலே கிளராநின்றுள்ள திரைகளை யுடைத்தான திருப்பாற்கடலிலே ப்ரஹ்மாதிகள் கூக்குரல் கேட்கும்படியாகக் கண்வளர்ந்தருளினதுவும், இவர்களார்த்தி கேட்ட பின்பு இந்த்ராதிகளுக்குக் குடியிருப்புப் பண்ணிக் கொடுக்க அடியிட்டபடியும். (திசை ஞாலம் தாவியளந்ததும்) திக்குக்களோடே கூடின பூமியை இரப்பாளனாயிரந்து அநாயாஸேந வளர்ந்து அளந்தபடியும். (திசை ஞாலம் தாவியளந்ததும்) “இந்த்ராதிகளை ரக்ஷிக்கவேணும்” என்றஆசையோடே காணும் பூமியை அளந்தது. ஆசை - திக்கு. “இவன் திருவடிகளாலே நம்மை ஸ்பர்சிக்க வேணும்” என்றாசைப்பட்டுக் காணும் கிடக்கிறது பூமி. படுகை - உடைத்தாகை. பூமியினுடைய ஆசையாவது, திக்குப்பட்டிறேயிருப்பது அவ்வளவன்றிக்கே, அறிவு கேட்டுக்குத் தலையான பசுக்களோடே சேர்ந்து வர்த்தித்தபடியுமே சொல்லி யடைவு கெடக் கூப்பிட்டு. (நெடுங்கண் நீர் மல்க) இக்கண்ணில் பரப்படங்கலும் பரப்பு மாற ஜல தத்த்வமுண்டாவதே! (நிற்குமே) பிதற்றவும் க்ஷமையன்றிக்கே, கண்ணநீர் மல்குகை “ஸ்வஸ்த்த தசை” என்னும்படி ஸ்தப்தையாய் நில்லா நின்றாள்.

விளக்கம் - (உமக்கு ஆசையின்றி அகற்றினீர்) - ஆனால் இவளை நாங்கள் அகற்றினோமோ என்பதற்கு விடை அளிக்கிறார். அந்த ஊருக்கு இவளை அழைத்துச் செல்லுதல் மற்றும் இவளிடம் ஆசை அறுதல் என்பதும் பர்யாயம்; அதாவது ஒரே பொருள் தருவதாகவே உள்ளன. இவ்விதம் ஆன பின்னர், இவளை “வேண்டாம்” என்று அல்லவோ அங்கு அழைத்துச் சென்றீர்கள்! (திரைகொள் இத்யாதி) - தன்னுடைய அருகாமையில் உள்ள நிலை காரணமாக ஓங்கி எழுந்தபடி உள்ள அலைகள் கொண்ட திருப்பாற்கடலில், நான்முகன் போன்றவர்களுடைய கூக்குரல் கேட்டும்படியாகத் திருக்கண்கள் வளர்ந்த விதம். இவர்களுடைய அபயக்குரல் கேட்டவுடன் இந்திரன் போன்றவர்களுக்கு, அவர்களுடைய இருப்பிடத்தை மீண்டும் அவர்களுக்கே அளிப்பதற்காகத் திருவடிகள் கொண்டு அடியிட்ட விதம். (திசை ஞாலம் தாவியளந்ததும்) – திக்குகளுடன் கூடிய இந்தப் பூமியை யாசகம் பெறுபவன் போன்று இரந்து, மிகவும் எளிதாக வளர்ந்து, அளந்த விதமும். (திசை ஞாலம் தாவியளந்ததும்) - “இந்த்ரன் உள்ளிட்ட தேவர்களைக் காப்பாற்ற வேண்டும்” என்ற ஆசையுடன் பூமியை அளந்தான். ஆசை என்பது விருப்பம் மற்றும் திசை ஆகிய இரு பொருள்களைத்

தருவதாகும். “இவன் தனது திருவடிகளால் நம்மை ஸ்பர்சிக்க வேண்டும்” என்று ஆசை கொண்டு பூமி நிற்கிறது. பூமியின் ஆசை என்பது அடைவுபட்டபடி உள்ளதாகும். அது மட்டும் அல்லாமல், அறிவற்ற வஸ்துக்கள் என்பவற்றில் முதன்மையாக உள்ள பசுக்களுடன் சேர்ந்து வளர்ந்த விதத்தையும் கூறி அழைத்து. (நெடுங்கண் நீர் மல்க) - இந்தக் கண்கள் முழுவதும் நீர் நிறையும்படியாக ஜலதத்வம் உள்ளது வியப்பே ஆகும். (நிற்குமே) – பிதற்றவும் கூடப் பொறுமை இன்றி, கண்ணீர் மல்கியபடி உள்ளாள். “தனது நிலை” என்பதை வெளிப்படுத்தும்படி செயலற்று நின்றாள்.

6-5-4. நிற்கும் நால் மறை வாணர் வாழ் தொலைவில்லி மங்கலம் கண்டபின்
அற்கம் ஒன்றும் அற உறாள் மலிந்தாள் கண்டீர் இவள் அன்னைமீர்
கற்கும் கல்வி எல்லாம் கருங்கடல் வண்ணன் கண்ண பிரான் என்றே
ஒற்கம் ஒன்றும் இலள் உகந்து உகந்து உள் மகிழ்ந்து குழையுமே

பொருள் - எப்போதும் உள்ளதான நான்கு வகைபட்ட வேதங்களுக்கு நிர்வாஹகராக உள்ளவர்கள், பகவத் அனுபவத்தால் வாழ்ந்தபடி உள்ள திருத்தொலைவில்லி மங்கலத்தைக் கண்ட பின்னர், இந்தப் பராங்குச நாயகியானவன் அடக்கம் என்பதை முற்றிலும் விட்டாள். இவள் நம்மை மீறிவிட்டாள். தாய்மார்களே! இவள் இவ்விதம் ஆகும்படியாக, இவளைப் பெற்று வளர்ந்த நீங்கள் பார்த்தீர்கள் அல்லவோ? இவள் தொடர்ந்து அப்யாஸம் செய்வதாகக் கூறும் சொற்கள், “ச்யாமளமான கடல் போன்ற வடிவும் குணமும் கொண்டவனும், அடியார்களுக்குப் பவ்யமாக உள்ளவனும் ஆகிய க்ருஷ்ணன் என்ற மஹா உபகாரகன்” என்பதே ஆகும். இப்படியாக அவனுடைய ரூபத்தின் மேன்மையையும், ஆத்ம குணத்தையும் கூறியபடி, எந்தவிதத்திலும் தளர்ச்சி இல்லாதவளாக, அத்தகைய குணங்களை எப்போதும் எண்ணியபடி உள்ளதால் மேன்மேலும் உகந்தவளாக, அதன் விளைவாக நெஞ்சம் மகிழ்ந்து, அந்தகரணம் குழைந்து நிற்கிறாள்.

அவதாரிகை - அவ்வூரையும் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களையும் யாதொரு நாள் கண்டாள், அன்று தொடங்கித் தடைநிற்கை தவிர்ந்தா ளென்கிறாள்.

விளக்கம் – தோழியானவள் தாய்மார்களிடம், "இவள் எந்த ஒரு நாளில் திருத்தொலைவில்லைமங்கலத்தையும், அந்த ஊரில் உள்ள ஸ்ரீவைஷ்ணவர்களையும் பார்த்தாளோ, அந்த நாள் தொடங்கி, அடங்கி நிற்பதைத் தவிர்த்தாள்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (நிற்கும் நான்மறை) நித்யமான நாலு வேதங்கள். நித்யத்வமாவது பூர்வ பூர்வோச்சாரண க்ரமத்தைப் பற்ற உத்தரோத்தரோச்சார்யமாணத்வம். ஆகையாலே நித்யமான வேதம். அபௌருஷேயமாகையாலே நிர்த்தோஷமாயிருக்குமிறே. (வாணர்) வ்யாஸ பதஞ் செலுத்தவல்லராயிருப்பர்கள். (வாழ்) வேதார்த்த பூதனைக் கண்ணாலே கண்டு வாழா நிற்பர்கள். (வாழ் தொலைவில்லிமங்கலம்) வேத தாத்பர்யபூதனைக் கண்டு நித்யாநுபவம் பண்ணுகிறவூர். "ஸ்வாத்யாயாத் யோகமாஸீத" என்னுமளவன்றியே, "யோகாத் ஸ்வாத்யாயமாமநேத்" என்று ஆரூட யோகராயிருக்குமவர்கள்.

விளக்கம் – (நிற்கும் நான்மறை) - எப்போதும் உள்ள நான்கு வேதங்கள். ஆனால் ஒலி என்பது மூன்று க்ஷண காலம் மட்டுமே நிற்கும்போது, இவை நித்யமாக இருக்கமுடியுமா என்பதற்கு விடை அளிக்கிறார்; "ஆநுபூர்வி நித்யம்" என்பதான "ஆசிரியர் முதலில் கூற, அதனைக் கேட்டு சரியான முறையில் தொடர்ந்து சிஷ்யர்கள் உச்சரிக்கும் முறையாகத் தவறாமல் வருதல்" என்பதே நித்யம் என்கிறார். அதாவது முன்பு கூறப்பட்ட முறைப்படி பின்னர் உச்சரித்தல், எனவே நித்யமாக உள்ள வேதம். எந்த ஒரு மனிதனாலும் செய்யப்படாமல் உள்ளதால், தோஷங்கள் ஏதும் இல்லாதபடி உள்ள தன்மை. (வாணர்) – வேதங்கள், புராணங்கள் ஆகியவற்றில் வல்லவர்கள். (வாழ்) – வேதங்களில் கூறப்பட்டவனை நேரில் கண்டு, அதன் விளைவாக வாழ்ந்தபடி உள்ளவர்கள். (வாழ் தொலைவில்லிமங்கலம்) - வேதத்தின் தாத்பர்யமாக உள்ளவனைக் கண்டு, எப்போதும் அனுபவித்தபடி உள்ள சரீரம் கொண்டவர்கள். அவர்கள் வாழ்வதைக் கூறுகிறார்; ஸ்ரீவிபு (6-6-2) – ஸ்வாத்யாயாத் யோகமாஸீத - வேத அத்யயனம் மூலம் யோகம் கைகூடப் பெற்று - என்பதுடன் நிற்காமல், ஸ்ரீவிபு. (6-6-2) - யோகாத் ஸ்வாத்யாயமாமநேத் - அந்த யோகம் மூலம் தங்களுடைய அத்யயனம் மேலும் பெருகி கைகூடப்பெற்றவர்கள் - என்பதாக, ஸித்தி பெற்ற யோகம் கொண்டவர்கள்.

வ்யாக்யானம் - (கண்ட பின்) அவ்வூரில் வைஷ்ணவர்களும் அவனுமான சேர்த்தியைக் காட்டிக் கொடுத்துக் கெடுத்திகோள். (அற்கமொன்றும் அறவுறாள்) அற்கம் – அல்குதல்; அதாவது - அடக்கம். நம் சொல்வழி வந்திருக்கும் இருப்புத் தவிர்ந்தாள். தாயார் சொல்வழி வருமத்தை யொன்றையுமறவிட்டாள். (மலிந்தாள்) நம்மால் ஹிதஞ்சொல்லி மீட்க வொண்ணாதபடி மிக்காள். மீட்கைக்கு யோக்யதையுமில்லாதபடியானாள். (மலிந்தாள் கண்டீர் இவள்) இவளுடைய பகவத் ப்ராவண்யம் எனக்குத் தெரியாதபடி விஞ்சினாள்கிடிகோள். (அன்னைமீர்) மீட்கத் தேடுகிறவுங்களோடு, இவள் கருத்தறிந்தேனாகச் சொல்லுகிற என்னோடு வாசியில்லை தெரியாமைக்கு. நித்யசூரிகள் யாத்ரை ஸம்ஸாரிகளுக்குத் தெரியிலன்றோ நமக்கு இவள் அளவு தெரிவது!

விளக்கம் – (கண்ட பின்) இப்படியாக அந்தத் திவ்யதேசத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களும் அவனுமாக உள்ள சேர்த்தியை நீங்கள் இவளுக்குக் காண்பித்து கொடுத்தீர்கள். (அற்கம் ஒன்றும் அறவுறாள்) - அற்கம் என்றால் அடக்கம். இப்படிப்பட்ட அடக்கத்தை இவள் சிறிதும் கொள்ளவில்ல. நம்முடைய சொற்களில் வழி நடந்து வரும் நிலையைத் தவிர்த்தாள். (மலிந்தாள்) - நம்மால் நல்ல சொற்கள் கூறி மீட்க இயலாதபடியாக இவள் கைமீறினாள். இவ்விதம் இவள், மீட்பதற்கான தகுதியும் இல்லாதபடி ஆனாள் என்று கருத்து. (மலிந்தாள் கண்டீர் இவள்) - அல்லது எனக்குத் தெரியாதவற்றையும் கூட, இவள் பகவானிடம் ஈடுபாடு கொண்டுள்ள நிலையில், அளவு கடந்தாள் என்றும் கூறலாம். இதனைக் கேட்ட தாய்மார்கள், “நீ இவளுடைய அந்தரங்கமான தோழி அல்லவோ? உனக்குத் தெரியாமல் ஏதேனும் இருக்குமோ?”, என்றனர். இதற்குத் தோழி கூறுகிறாள்; (அன்னைமீர்) - இவளை இந்த நிலையிலிருந்து மீட்கும் வழி தேடியபடி உள்ள உங்களுக்கும், இவள் கருத்து அறிந்து சொல்லக்கூடிய எனக்கும் இப்போது எந்தவிதமான வேறுபாடும் இல்லை; ஆகவே இவள் நிலையை நான் தெரியாமல் உள்ளேன். நித்யஸூரிகளுடைய பழக்கவழக்கம் குறித்து ஸம்ஸாரிகளுக்குத் தெரிந்தால் அல்லவோ இவளுடைய ஈடுபாட்டின் ஆழம் நம்மால் அறிய இயலும்?

வ்யாக்யானம் - (கற்குமித்யாதி) சொல்லும் சொல்லெல்லாம் திருநாமமேயாய், அது தன்னிலும் வடிவழகுக்கும் ஆச்ரித பாரதந்தர்யத்துக்கும் வாசகமான திருநாமங்களையே சொல்லாநின்றாள். “க்ருஷ்ணனாகில் ஆச்ரித பவ்யன்” என்று ப்ரஸித்தமிறே. (பிரான்) அவ்வடிவழகைத் தாழநின்று என்னை அநுபவிப்பித்த வுபகாரகன். (என்றேயொற்க மொன்றுமிலள்) திருநாமங்களை இடைவிடாதே

சொல்லாநின்றால் இளைப்பொன்று மின்றிக்கே யிராநின்றாள். “விரஹ தௌர்ப்பல்யத்தாலே திருநாமத்தை முட்டச் சொல்லமாட்டாள்” என்றிரா நிற்கச்செய்தே, வருத்தமறச் சொல்லாநின்றாள். திருநாமந்தான் தரிப்பைக் கொடுத்துச் சொல்லுவிக்கும் போலேகாணும்; “பாடியிளைப்பிலமி”றே. ஒற்கம் – மிடி; இளைப்பின்றிக்கே யென்னுதல்; அன்றிக்கே, ஒற்கமாகிறது ஒடுக்கமாய், தாய்மார் முன்பே “இப்படி சொல்லாநின்றோமே” என்னும் லஜ்ஜையின்றிக்கே யென்னுதல். (உகந்துகந்து) திருநாமத்வாரா அவன் ஸௌந்தர்ய சீலாதிகளை யநுஸந்தித்து மேன்மேலென ப்ரீதையாகா நின்றாள். (உள்மகிழ்ந்து குழையுமே) அந்த:கரண ப்ரீத்யதிசயத்தாலே ஆச்ரயம் அழியாநிற்கும்.

விளக்கம் – (கற்குமித்யாதி) - கற்கை என்றால் கூறுதல். இவள் உரைக்கும் சொற்கள் அனைத்தும் இவன் திருநாமங்களாகவே உள்ளது. அதிலும் குறிப்பாக இவனுடைய திருமேனி அழகைக் கூறும் திருநாமங்களையும், இவன் தனது அடியார்களிடம் வசப்பட்டு நிற்பதைக் கூறும் திருநாமங்களைக் மட்டுமே கூறியபடி உள்ளாள். ஆனால் “கண்ணன்” என்றால் அடியார்களுக்கு வசப்பட்டவன் என்பதைக் கூறுமோ என்றால், “க்ருஷனண் என்றால் அடியார்களிடம் பவ்யமாக உள்ளவன்” என்ற பொருள் அனைவரும் அறிந்த ஒன்றாகும். (பிரான்) - அந்த வடிவழகை, என் அளவிற்கு இறங்கி வந்து, என்னை அனுபவிக்கும்படிச் செய்த உபகாரகன். (என்றே ஒற்கம் ஒன்றுமிலள்) - திருநாமங்களை இடைவிடாமல் கூறியபடி உள்ள நிலையில் மட்டும் எந்தவிதமான களைப்பும் அடையாமல் உள்ளாள். ஆனால் களைப்பு ஏன் உண்டாகும் என்று தோழி எண்ணினாள் என்பதற்கு விடை அளிக்கிறார்; “இவள் அவனைப் பிரிந்த விரக தாபம் காரணமாகத் திருநாமங்களை முழுவதும் கூற இயலாமல் இருப்பாள்” என்று நினைத்தபோது, எந்தவிதமான களைப்போ அல்லது வருத்தமோ இன்றி அவன் திருநாமத்தை உச்சரித்தபடி உள்ளதைத் தோழி காண்கிறாள். அந்தத் திருநாமங்களே இவளுக்கு, தன்னைத் தாங்கி நிற்கும் சக்தியை அளித்து, இவள் தொடர்ந்து உச்சரித்தபடியாக தங்களைத் தங்களே செய்யும் போலும். திருநாமம் இவ்விதம் தாங்கி நிற்கும் சக்தி அளிக்குமோ என்பதற்கு ப்ரமாணம் திருவாய்மொழி (1-7-10) – பாடி இளைப்பிலம் – என்பதாகும். ஒற்கம் என்றால் மிடி; அதாவது இளைப்பு இன்றி இருத்தல். அல்லது ஒற்கம் என்பதற்கு ஒடுக்கம் என்று பொருள் கொண்டு, தனது தாயார் முன்பாகவே இவ்விதம் கூறுகிறோம் என்ற நாணம் இல்லை என்று கூறலாம். (உகந்து உகந்து) - திருநாமம் மூலம் அவனுடைய அழகு, சீலம், போன்றவற்றை எண்ணியவளாக, மேன்மேலும் ப்ரீதி நிறைந்தவளாக

நின்றாள். (உள்மகிழ்ந்து குழையுமே) - அந்தகரணத்தில் ப்ரீதி மிகுதியாக உள்ளதால், சரீரம் உருக்குலைந்து நிற்கிறாள்.

6-5-5. குழையும் வாள் முகத்து ஏழையைத் தொலைவில்லி மங்கலம் கொண்டு புக்கு
இழை கொள் சோதிச் செந்தாமரைக் கண் பிரான் இருந்தமை காட்டினீர்
மழை பெய்தால் ஒக்கும் கண்ண நீரினொடு
அன்று தொட்டும் மையாந்து இவள்
நுழையும் சிந்தையள் அன்னைமீர் தொழும் அத் திசை உற்று நோக்கியே

பொருள் – இயல்பாகவே மென்மையான குணம் கொண்டவளும், ஒளி வீசும் முகம் உடையவளும், தனக்கு ஏற்ற பகவத் விஷயத்தில் ஆழ்ந்து ஈடுபடும் விடாப்பற்று கொண்டவளும் ஆகிய இவளை, நீங்கள் திருத்தொலைவில்லிமங்கலம் அழைத்துச் சென்றீர்கள். அங்குள்ளவனும், திவ்யமான ஆபரணங்கள் ஏதும் அவசியம் இல்லாமல் தானாகவே ஒளிர்பவனும், தாமரை போன்ற திருக்கண்கள் கொண்டவனும், அத்தகைய தனது அழகைத் தன்னுடைய அடியார்கள் அனுபவிக்குபடிச் செய்யும் உபகாரகனும் ஆகிய அவனை இவளுக்குக் காண்பித்தீர்கள். தாய்மார்களே! அன்று தொடங்கி, மழை பெய்தது போன்றுள்ள கண்ணீர் நிறைந்த இவள், மயங்கியவளாக, அவனுடைய அழகில் புகுந்த நெஞ்சம் கொண்டவளாக, அவன் உள்ள திசையை எப்போதும் உற்று நோக்கி, கைகள் குவித்தபடி உள்ளாள்.

அவதாரிகை - இவள் ஸ்வபாவத்தை யறிந்து வைத்து, தேவபிரானுடைய அழகைக் காட்டிக் கெடுத்திகோ ளென்கிறாள். அன்றியே, அவ்வூரில் வர்த்திப்பார்படியைக் காட்டினால், அவர்கள் ஜீவநத்தையும், இவளுக்குக் காட்டிக் கொடுக்கவேணுமோ? என்கிறா ளென்றுமாம்.

விளக்கம் – “இவளுடைய இயல்பை நன்கு அறிந்த நீங்கள் இவளுக்கு தேவபிரானுடைய அழகைக் காண்பித்துக் கொடுத்தீர்கள்” என்கிறாள். அல்லது, “அந்த ஊரில் வாழ்பவர்களுடைய விதங்களைக் காண்பித்தீர்கள். அவர்கள் உயிர் வாழ்வதற்கான நிலையாக உள்ள அவனையும் காண்பித்தும் கொடுக்கவேண்டுமோ?”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (குழையுமித்யாதி) ஒரு ஸம்ச்லேஷம் வேண்டாதே மார்த்தவத்தாலே நையும் ஸ்வபாவையாய், "உகந்துகந்து உள்மகிழ்ந்து குழையும்" என்கிற பகவதநுபவத்தாலே ஒளியையுடைத்தான முகத்தை யுடையவளாய், "கிடையாது" என்றாலும் மீளமாட்டாத சாபலத்தை யுடையவளை. (தொலைவில்லிமங்கலங் கொண்டு புக்கு) பகவத் பரிக்ரஹமான தேசத்திலே கொடுபுகத் தவிராத பின்பு, ஸ்ரீவைகுண்டத்திலே மேன்மையைக் காட்டவன்றோ அடுப்பது! நீர்மைக்கு எல்லை நிலமானவிடத்தே கொடுபுகுவாருண்டோ? வாள் - ஒளி.

விளக்கம் – (குழையுமித்யாதி) - எந்தவிதமான சேர்க்கையும் அவசியம் இல்லாமல், இயல்பாகவே மென்மைத்தன்மை கொண்டவளாக இருப்பதால், துவளும் நிலை கொண்டவளாகவும்; அவனைப் பிரிந்து நிற்கும்போதிலும் முகத்தில் ஒளி உண்டாவதற்கான காரணம், "உகந்து" என்பதாக, பகவத் அனுபவம் காரணமாக ஒளி வீசிய முகம் கொண்டவளாகவும்; "கிடையாது" என்றாலும் திரும்ப இயலாமல் பகவானால் விரும்பப்படும் திவ்யதேசத்திற்கு அழைத்துச் செல்வதை விடாத பின்னர், ஸ்ரீவைகுண்டத்தின் மேன்மையாகக் காண்பித்து விலக்க எண்ணுவது இயலுமா? நீர்மைக்கு எல்லையாக உள்ள அந்தத் திவ்யதேசத்திற்கு இவளை அழைத்துச் செல்ல துணியலாமோ? இங்கு "வாள்" என்பது "ஒளி" என்ற பொருளில் உள்ளது.

வ்யாக்யானம் - (இழைகொள் சோதி) ஆபரணங்களினுடைய ஒளியை யுடைத்தாயிருக்கு மென்னுதல், வேறோராபரணம் வேண்டாதே தானே யாபரணமான தேஜஸ்ஸு என்னுதல்; ஆபரணவொளி தன்னுள்ளே யடங்கும்படியான ஸ்வாபாவிகமான புகரென்னுதல். (செந்தாமரைக்கண் பிரான்) விகாஸாதிகளுக்குத் தாமரையை ஒப்பாகச் சொல்லலாயிருக்கிற திருக்கண்கள். அகவாயில் தண்ணளிக்கு ப்ரகாசகமான திருக்கண்கள். (பிரான்) "பக்தாநாம்" என்கிற வடிவு.

விளக்கம் - (இழைகொள் சோதி) - "இழைகொள் சோதி" என்பதற்கு மூன்று விதமாகப் பொருள் கூறுகிறார். முதல் பொருளில், "இழை சோதி கொள்" என்று கொண்டு, ஆபரணங்களுடைய ஒளியைக் கொண்ட திருமேனி என்பதாகிறது. இரண்டாவது பொருளில், வேறு ஓர் ஆபரணம் அவசியம் இல்லாமல், தானே ஆபரணமாக உள்ள தேஜஸ் கொள்பவன் என்பதாகிறது. மூன்றாவது பொருளில், ஆபரண ஒளியை தன்னில் க்ரஹித்துக் கொண்டு இயல்பாகவே புகர்

என்பதாகிறது. (செந்தாமரைக்கண் பிரான்) - மலர்ந்தபடி உள்ள தன்மைக்குத் தாமரையை ஒப்பாகக் கூறலாம்படி உள்ள திருக்கண்கள். தாமரை என்று கூறாமல் செந்தாமரை என்று ஏன் கூறினார் என்றால், உள்ளில் இருக்கும் ஆழ்ந்த ப்ரேமையானது வெளிப்படும்படியாக உள்ள திருக்கண்கள் என்பதை உணர்த்தவே ஆகும். (பிரான்) - ஜிதந்தேயில் “பக்தாநாம் – பக்தர்களுக்காகவே” என்பதாக உள்ள திருமேனி.

வ்யாக்யானம் - (இருந்தமை காட்டினீர்) நீங்கள் கெடுத்திகோள். இவளறியாத விஷயங்களும் நீங்களே காட்டிக் கொடுத்துக் கெடுத்திகோள். (இருந்தமை) இருப்பில் வீறு அங்கே பர்யவஸிதம் போலே. நின்றானாகில், “நிலையார நின்றான்” என்பர்கள்; இருந்தானாகில் “இருந்தமை காட்டினீர்” என்பர்கள்; கிடந்தானாகில் “கிடந்ததோர் கிடக்கை” என்பர்கள்; அவன் ஸ்வபாவத்தைக் காட்டினிகோள் என்றுமாம். (காட்டினீர்) நோக்கிருந்தபடி கண்டாயே, முறுவலிருந்தபடி கண்டாயே யென்று. இப்போது அதுக்கு வந்ததென்? என்னில்; (மழை பெய்தாலொக்கும் கண்ணநீரினொடு) கண்டவநந்தரம் வர்ஷதாரை போலே கண்ணநீர் வெள்ளமிடுகிறபடி பாரிகோள்! ஆளவந்தார் மணக்கால்நம்பி பக்கலிலே எம்பெருமானைக் கேட்டவநந்தரம், “உபாயம் இதுக்கு மேலில்லை; இவ்விஷயத்தை இப்போதே ஸாக்ஷாத்கரிக்க விரகில்லையோ?” என்றாராம். அப்படி கண்டவநந்தரம் கண்ணநீர் வெள்ளமிடப் புக்கது அத்தனை.

விளக்கம் – (இருந்தமை காட்டினீர்) - நீங்கள் இவளைக் கெடுத்தீர்கள். இதனைக் கேட்ட தாய்மார்கள், “நாங்கள் என்ன செய்தோம்?”, என்பதற்குத் தோழியானவள், “இவள் அறிந்திராத விஷயங்கள் நீங்களே இவளுக்குக் காண்பித்துக் கொடுத்து, இவளைக் கெடுத்தீர்கள்”, என்றாள்; இங்கு “விஷயங்கள்” என்பதை “சிறப்புகள்” என்பதாகப் பொருள் கொண்டு, அவனுடைய திருமேனியுடைய ஸௌந்தர்யம் , திருக்கண்களின் அழகு போன்றவை என்று கொள்ளவேண்டும். இவை அவனுடைய இருப்பில் உள்ளன என்கிறாள். (இருந்தமை) - அமர்ந்துள்ள நிலையின் வீறு அங்கே முடிவது போன்று நிற்பது. மற்ற நிலைகள் இனிமையாக இருக்காதோ என்பதற்கு விடை அளிக்கிறார். “இருந்தான்” என்றால், “இருந்தமை காட்டினீர்” என்றும், “கிடந்தான்” என்றால் “கிடந்த” என்றும் கூறுவாள். அதாவது அவன் “இருந்தமை” என்பதன் மூலம், இருப்பின் இயல்பைக் கூறினாள். (காட்டினீர்) - நீங்கள் அவளிடம், “அவன் நோக்கியபடி உள்ளதைக் கண்டாயோ,

அவன் புன்முறுவல் செய்தபடி உள்ளதைக் கண்டாயோ", என்று பலவற்றையும் கூறினீர்கள். இதற்குத் தாய்மார்கள், "அதனால் வந்தது என்ன?", என்பதற்கு விடை அளிக்கிறாள். (மழை பெய்தாலொக்கும் கண்ணநீரினொடு) – அவனைக் கண்ட பின்னர் மழை பொழிவது போன்று இவளுடைய கண்கள் வெள்ளம் பெருகி நிற்பதைப் பாருங்கள். இதற்கு ஒரு நிகழ்வு கூறுகிறார். மணக்கால்நம்பியிடம் ஆளவந்தார் எம்பெருமான் குறித்துக் கேட்டவுடன், "இதற்கு மேல் வேறு உபாயம் இருக்க முடியாது. இந்த விஷயத்தை இப்போது நேரடியாகக் காண்பதற்கு வழி இல்லையோ?", என்றார். அப்போது மணக்கால்நம்பி, "வழி உள்ளது" என்று கூறி, திருவரங்கம் பெரியகோயிலுக்குச் சென்று, பெரியபெருமாள் திருவடிகளைக் காண்பித்தார். இவ்விதம் கண்டவுடன் கண்ணும் கண்ணீருமாக ஆளவந்தார் நின்றார்.

வ்யாக்யானம் - "ஏழை" என்ற இடத்தை மூதலிக்கிறாள்; (அன்று தொட்டும்) நீங்கள் காட்டின அன்று தொடங்கி. (மையாந்து) மயங்கி. "குழையும்" என்கிறவிடத்தை மூதலிக்கிறாள்; (இவள் நுழையும் சிந்தையள்) அவன் குணங்களிலே உட்புகா நின்ற நெஞ்சையுடையவள். ஸ்வருபத்தையும் ஆத்மகுணத்தையும் ஒழிய வடிவழகிலே இடங்கொள்ளா நின்றாள். அங்கே சுழித்து நின்று, "இதொரு வடிவழகே! இதோரொப்பனையே! இதொரு கண்ணழகே!" என்று இடங்கொள்ளா நின்றாள். (அன்னைமீர்) இவளை மீட்கப் பார்க்கிறவளவிறே யுங்களது. (தொழும்) "ஏகஸ்த்த ஹ்ருதயா நூநம் ராமமேவாநுபச்யதி" என்கிறபடியே, அத்திக்கை மறுபாடுருவப் பார்த்துத் தொழாநிற்கும். இவள் தொழிலும் ஒரு திக்குப் பட்டல்லதிராது காணும்.

விளக்கம் – "ஏழை" என்று பாசுரத்தில் உள்ளதை இங்கு நிரூபிக்கிறார். (அன்று தொட்டும்) - நீங்கள் அவனை இவளுக்குக் காண்பித்த நாள் தொடக்கமாக, (மையாந்து) - மயங்கி. அடுத்து "குழையும்" என்று பாசுரத்தில் உள்ளதை இங்கு நிரூபிக்கிறார்; (இவள் நுழையும் சிந்தையள்) - அவனுடைய திருக்கல்யாண குணங்களில் எப்போதும் புகுந்தபடி உள்ள நெஞ்சம் கொண்டவள். அவனுடைய ஸ்வரூபம் மற்றும் ஆத்ம குணங்கள் ஆகியவற்றில் மட்டும் அல்லாமல், அவனுடய வடிவழகிலும் ஈடுபட்டு நின்றாள். அவை இரண்டையும் அனுபவித்து, அதன் பின்னர், "இது ஓர் வடிவழகு உள்ளதே" என்று இவற்றில் ஈடுபட்டபடி நிற்கிறாள். இங்கு "இருந்தமை" என்பதால் வடிவழகும், "இழை கொள் சோதி" என்பதால்

ஒப்பனையும், "செந்தாமரைகண்" என்பதால் கண்ணழகும் கூறப்பட்டது. (அன்னைமீர்) - இவளுடைய பாவபந்தம் அறியாமல் இவளை மீட்கப் பார்க்கும் அளவு முடிய உங்களுடைய அறியாமை உள்ளது. (தொழும்) – "அத்திசையுற்று நோக்கி தொழும்" என்பதை ஸுந்தரகாண்டம் (16-25) – ஏகஸ்த்த ஹ்ருதயா நூநம் ராமமேவாநுபச்யதி – ஒரு இடத்தில் தனது சிந்தனையை நிறுத்தியவளாக, இராமனை உறுதியாக நோக்கியபடி உள்ளாள் - என்பதற்கு ஏற்ப கொள்ளலாம்; அவன் உள்ள திசையை எந்தவிதமான சலனமும் இன்றி பார்த்தபடி தொழுவாள். இவளுடைய இந்தச் செயல்கள் அனைத்தும் எந்தவிதமான அடைவுபட்டதும் அல்ல.

6-5-6. நோக்கும் பக்கம் எல்லாம் கரும்பொடு செந்நெல் ஓங்கு செந்தாமரை
வாய்க்கும் தண் பொருநல் வடகரை வண் தொலைவில்லி மங்கலம்
நோக்கு மேல் அத்திசை அல்லால் மறு நோக்கு இலள் வைகல் நாள்தொறும்
வாய்க்கொள் வாசகமும் மணிவண்ணன் நாமமே இவள் அன்னைமீர்

பொருள் – கண்களில் பார்க்கப்பட்ட இடங்கள் அனைத்திலும் கரும்புடன் கூடிய செந்நெல்லும், இவற்றுக்கு நிழல் தரும்படியாக ஓங்கி நிற்கும் செந்தாமரையும் நன்கு வளர்ந்தபடி உள்ளதும், குளிர்ந்ததும் ஆகிய தாமிரபரணியின் வடக்குக்கரையில் உள்ளதும், ஒரு நகரத்திற்குத் தேவையான அனைத்து ஸம்பத்துக்களுடன் குறைவின்றி உள்ளதும் ஆகிய திருத்தொலைவில்லிமங்கலத்தை, வேறு எதனையும் பார்க்காதவள் பார்த்தாள் என்றால், அந்தத் திசை தவிர மற்ற எதனையும் அதன் பின்னர் பார்க்கமாட்டாள். இவளை இவ்விதம் செய்த தாய்மார்களே! இனி இவள் பார்த்தல் என்ற செயலைத் தவிர, மற்ற அனைத்தும் காலங்களிலும் ஒருநாளும் விடாமல் நீல ரத்னம் போன்றுள்ள வடிவழகு கொண்டவனுடைய ஸௌலப்யம் மற்றும் ஸௌந்தர்யம் போன்றவற்றைக் கூறும் திருநாமங்களை மட்டுமே தனது வாக்கில் கொண்டபடி இருப்பாள். அத்தகைய திருநாமங்கள் மட்டுமே இவள் வாக்கில் உள்ளன.

அவதாரிகை - தௌர்ப்பல்யத்தாலே முதலிலே பார்க்கமாட்டாள், பார்த்தாளாகில் மற்றோரிடமும் பாராளென்கிறாள்.

விளக்கம் – "வலிமை இல்லாத காரணத்தால் முதலில் பார்க்கமாட்டாள். ஆனால் பார்த்த பின்னர் வேறு எந்த ஓர் இடத்தையும் பார்க்கமாட்டாள்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (நோக்கும் பக்கமெல்லாம்) பார்த்த பார்த்தவிடமெல்லாம். “திருப்பொருநல் நோக்கும் பக்கமெல்லாம்” என்று பாடுவாருமுண்டு. (கரும்பு இத்யாதி) கரும்பும், அத்தோடேகூட இசலி வளருகிற செந்நெலும், இரண்டுக்கும் நிழல் செய்கிற செந்தாமரையும். (வாய்க்கும்) ஸம்ருத்தமாமென்னுதல், இட்டதெல்லாம் சதசாகமாகப் பணைக்குமென்னுதல். (தண்பொருநல் இத்யாதி) ச்ரமஹரமான திருப்பொருநல் வடகரையிலேயான ஐச்வர்யத்தையுடைய தொலைவில்லி மங்கலம்.

விளக்கம் – (நோக்கும் பக்கமெல்லாம்) - அந்த ஊரை நோக்கும் இடங்கள் அனைத்தும். இதனை “திருப்பொருநல் நோக்கும் பக்கமெல்லாம்” என்று பாடுவர்; இவ்விதம் கூறும்போது, “நோக்குகை” என்பதற்கு “ப்ரவாஹமாக ஓடுதல்” என்று பொருள்; பொருநல் என்பது தாமிரபரணி; அதாவது தாமிரபரணி பெருக்கெடுத்து ஓடுவதைக் கூறுதல். நிறைந்துள்ள நதி என்பதை அடுத்து கூறுகிறார். (கரும்பு இத்யாதி) – கரும்பும் அதனுடன் சேர்ந்து வளரும் செந்நெல்லும். இந்த இரண்டிற்கு நிழல் தருவதாக உள்ள செந்தாமரையும். (வாய்க்கும்) - நிறைந்து இருக்கும். அங்கு விளைவிக்கப்படும் அனைத்தும் நூறு கிளைகள் கொண்டதாகப் பணைத்தபடி உள்ளன. (தண்பொருநல் இத்யாதி) - களைப்பைப் போக்கவல்ல தாமிரபரணியின் வடக்குக்கரையில் அமைந்ததும், ஐச்வர்யம் நிறைந்ததும் ஆகிய திருத்தொலைவில்லிமங்கலம்.

வ்யாக்யானம் - (நோக்குமேல்) முதலிலே நோக்க சக்தையல்லள்; வருந்திப் பார்த்தாளாகில் அத்திக்கையொழிய முகமெடுத்துப் பார்க்கிறிலள். (வைகல் நாடொறும்) கழிகிற நாள்தோறும். (வாய்க்கொள் வாசகமும்) வாயாலே சொல்லுகிற சொலவும். (மணிவண்ணன் நாமமே) வடிவழகுக்கு வாசகமானவற்றையே சொல்லாநின்றாள். குணவிஷயமாதல் விபூதிவிஷயமாத லன்றிக்கே, வடிவழகுக்குத் தோற்றமை தோற்றச் சொல்லாநின்றாள். இவள் நிலையெது? நம் நிலையெது? உங்களது ஸ்வரூபஜ்ஞாநம், இவளது ரூபஜ்ஞாநம்.

விளக்கம் – (நோக்குமேல்) - முதலில் பார்ப்பதற்கு சக்தி இல்லாதவளாக இருந்தாள். பின்னர் மிகுந்த முயற்சி எடுத்து நோக்கினாள். அதன் பின்னர் அந்தத் திசையை விட்டு தனது முகத்தால் வேறு எங்கும் பார்ப்பதில்லை. (வைகல் நாடொறும்) - கழிந்து செல்லும் ஒவ்வொரு நாளும். (வாய்க்கொள் வாசகமும்) -

வாயால் கூறும் ஒவ்வொரு சொல்லும். (மணிவண்ணன் நாமமே) - வடிவழகைக் கூறுவதாகவே அமைந்த சொற்களாக உரைக்கிறாள். குணங்களைக் கூறுவதாகவும், அவனுடைய இரண்டு விபூதிகளையும் குறிப்பதாகவும் அல்லாமல், வடிவழகிற்குத் தான் தோற்றதை வெளிப்படுத்தும் சொற்களைக் கூறுகிறாள். இவளுடைய இந்த நிலை என்ன? நம்முடைய நிலை என்ன? உங்களுடையது ஸ்வரூப ஞானம், இவளுடையது அவனுடைய ரூப ஞானம்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்